# சித்தர்கள் மறுக்கும் சிலை வழிபாடு

**முனைவர் த.சந்திரகுமார்**

**உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,**

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி),**

**சிவகாசி.**

E.Mail ID: tctamilug2013@gmail.com

14

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர் இலக்கியத்தின் வழிபாட்டுத் தத்துவங்களில் உருவங்கள் பற்றியும், சிலை வழிபாட்டை மறுப்பதைப் பற்றியும், அவற்றிற்குக் கண்டனம் தெரிவிப்பதைப் பற்றியும் ஆராய்வதாக அமைகின்றது. சித்தர்கள் சித்தாதிகள் எனப்பட்டனர். இறைவனை வேறு எங்கும் பார்க்காதே உன் உள்ளத்திலே பார் என்று தமது பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர். புதுமையான கருத்துக்களையும், புரட்சிகரமான சிந்தனைகளையும், மூடநம்பிக்கைகளை எதிர்க்கும் நிலைகளையும் பற்றி ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள் :** சித்தர், சிலை வழிபாடு, சித்தாதிகள், சிவவாக்கியர், ஆலய வழிபாடு.

**முன்னுரை**

சித்தர்கள் சித்தாதிகள் எனப்பட்டனர். சித்திப் பெற்றவர் சித்தர் எனப்பட்டனர். அணிமா முதலிய சித்திகள் கைவரப்பெற்றவர்களே சித்தர்கள் எனப்பட்டனர். முக்திவழி , சித்தநெறி என்பது அறிவு, சிந்தித்தல், நிறைவேற்றுதல், முக்தியை யோகத்திற்குள் ஒன்றுதல் என்னும் பொருள்களைக் கொண்ட சொல்லாகும். மன ஒடுக்கம் சித்தாலயம் எனப்பட்டது. சித்தர்கள் அனைவரும் கையாண்ட மொழி தமிழ் மொழியாகும். அவர்களின் பாடல்கள் தமிழ் மொழியிலேயே காணப்படுகின்றன. வாழ்க்கைக் கலையைப் பிறர்க்கு உணர்த்தியதோடு வாழ்ந்தும் காட்டிய இலக்கியங்கள் சித்தர் இலக்கியங்கள் ஆகும். சித்தர்கள் சிலைவழிபாட்டிற்கு மறுப்புத் தெரிவித்ததைப் பற்றி ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**சிலைவழிபாட்டு மறுப்பு**

சமயம் ஒரு சமூக அமைப்பாக மாறும் போது கூடவே அதையொட்டிய நெறிமுறைகளும், வழக்கங்களும் உருவாகத் தொடங்குகின்றன. ஆனால் அவை மக்களின் சமய உணர்விலுள்ள தூய்மையை நாளடைவில் குறைத்து விடவும் செய்கின்றன. பரம்பரை பரம்பரையாக வந்த மரபுகளைக் கடைப்பிடிப்பது என்பது தன்னிலை உணர்வதைவிட முக்கியத்துவம் பெற்றதாகிவிடுகின்றது.

காலம் செல்லச்செல்ல இவையே பெரும் பிரச்சினையாக மாறி விடுகின்றன. மெய்யறிவை நாடும் மனித சமுதாயம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடவேண்டுமென்பதே சித்தர்களின் ஆவல். அந்த வகையில் உருவ வழிபாடு, புண்ணியத் தலங்களை நோக்கிச் செல்லும் பாத யாத்திரை, தீர்த்தங்களில் தலை முழுகுதல், தவவேடச்சின்னங்கள் அணிதல் முதலான சடங்குகளையும் அவர் அறவே மறுக்கின்றார். இவற்றைக் கடுமையாகக் கேலி செய்கின்ற போக்கு

இவருடைய பாடல்களில் மிகுந்திருப்பதைக் காணலாம்.
உருவ வழிபாட்டைக் கண்டனம் செய்யும் சிவவாக்கியர்

**"செங்கலும் கருங்கலும், சிவந்தசாதி லிங்கமும்**
**செம்பிலும் தராவிலும் சிவனிருப்பன் என்கிறீர்**
**உம்பதம் நிந்துநீர் உம்மைநீர் அறிந்தபின்**
**அம்பலம் நிறைந்த நாதர் ஆடல்பாடல் ஆகுமே"**[1]

என்ற பாடல் அடிகளின் மூலம் தீவிரமாகக் கண்டனம் செய்கிறார் சிவவாக்கியார். கல்லிலும், உலோகத்திலும் பொம்மை செய்து வைத்துக் கொண்டு, அதில் சிவனைத் தேடிப் பொழுதை வீணடிக்கிறீர்களே என்று வருந்துகிறார்.

**தத்துவமும் சடங்கும்**

உடைக்கப்பட்ட கல்லின் ஒரு பகுதி வாயிற்படியில் மிதிகல்லாகவும், மற்றொரு பகுதி கருவறையுள் கடவுள் சிலையாகவும் மாறுவதைக் கண்டு சிவவாக்கியர் வியக்கிறார். இத்தகைய சமுதாயச் சீர்திருந்தத் தத்துவமானது,

**"ஓசையுள்ள கல்லைநீர் உடைத்திரண்டு செய்துமே**
**வாசலிற் பதித்த கல்லை மழுங்கவேமி திக்கின்றீர்**
**பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சாத்துகிறீர்**
**ஈசனுக் குகந்தகல் எந்தகல்லு சொல்லுமே"**[2]

என்ற பாடலில் தெளிவுறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
தத்துவங்களைச் சடங்காக்கி இறைவனைக் கல்லாக்கிவிட்ட மூடர்கள் உயிரோடு உயிராகக் கலந்து நிற்கும் இறைவனைக் காண மறுப்பதை,

**"சாவதான தத்துவச் சடங்குசெய்யும் ஊமைகாள்**
**தேவர்கல்லும் ஆவரோ சிரிப்பதன்றி என்செய்வேன்**
**மூவராலும் அறியொணாத முக்கணன் முதற்கொழுந்து**
**காவலாக உம்முளே கலந்திருப்பன் காணுமே"**[3]

என்று எண்ணிச் சிரிக்கின்றார் அவர்.

மெய்யான இறையின் அருளை நேரடியாகப் பெறவேண்டும். அது இல்லாமல் மற்றொரு மூட நம்பிக்கை மூலமாக அதைப் பெற விழைவது மூடத்தனம் என்பதே சிவவாக்கியரின் கருத்து. சிற்பிகளின் கைவேலைப்பாடான சிலையுருவங்களை உயர்ந்த தெய்வமென்று நினைத்து அவற்றிற்குப் பெயர்களையும் இட்டு அமைக்கின்றார்கள். அனைத்தையும் படைத்த முழுமுதற்கடவுளை உம் உள்ளத்தில் சிந்தனை செய்யுங்கள் எனும் அவரது அறிவுரை,

**"பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள் என்றுநீர்**

**எண்ணமுற்றும் என்னபேர் உரைக்கிறீர்கள் ஏழைகாள்**

**பண்ணவும் படைக்கவும் படைத்துவைத்து அளிக்கவும்**

**ஓண்ணுமாகி உலகளித்த ஒன்றைநெஞ்சில் உன்னுமே"[4]**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

இறைவன் உருவம் அற்றவன் என்பதனை,

**“கட்டையால் செய்தேவரும் கல்லினால் செய்தேவரும்**
**மட்டையால் செய்தேவரும் மஞ்சளால் செய்தேவரும்**

**சட்டையால் செய்தேவரும் சாணியால் செய்தேவரும்**

**வெட்டவெளிய தன்றிமற்று வேறுதெய்வ மில்லையே"[5]**

என்று உறுதியாக மொழிகிறார்.

**சிலை வழிபாடு**

சிலை வழிபாடு ஒருக்காலும் மெய்யான இறையின்பத்தையளிக்காது என்பதை,

**“கல்லுவெள்ளி செம்பிரும்பு காய்ந்திடும் தராக்களில்**

**வல்லதேவ ரூபபேதம் அங்கமைத்துப் போற்றிடில்**
**தொல்லைஅற் றிடப்பெரும் சுகம்தருமோ சொல்லுவீர்**

**இல்லைஇல்லை இல்லைஇல்லை ஈசன்ஆணை இல்லையே"[6]**

என்று சிவவாக்கியர் முடிவாகக் கூறுகிறார்.

**ஆலய வழிபாடு**

ஆலய வழிபாடு, ஆறு குளங்களில் புனித நீராடல், புண்ணிய தலயாத்திரை முதலான நடவடிக்கைகளை சிவவாக்கியர் கடுமையுடன் இகழ்கிறார். யாராலும் ஆக்கவும் அழிக்கவும் இயலாத கோயிலும், குளங்களும் மனிதனின் மனத்தினுள்ளே இருக்கிறது என்கிறார்.

**“கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா**

**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**

**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே**

**ஆவதும் அழிவதும் இல்லைஇல்லை இல்லையே"[7]**

என்று கோயில் குளங்களை நாடுவதை விட்டுவிட்டுக் கடவுளை உங்களுக்குள்ளேயே கண்டுகொள்ளுங்கள் என்கிறார். நல்ல புண்ணிய தீர்த்தங்கள் எங்கே என்று நாடி ஓடும் மாந்தரைச் சிவவாக்கியர்,

**நல்லமஞ் சனங்கள்தேடி நாடிநாடி ஓடுறீர்**

**நல்லமஞ் சனங்கள்உண்டு நாதன்உண்டு நம்முளே**

**எல்லை மஞ்சனங்கள் தேடி ஏகபூசை பண்ணினால்**

**தில்லை மேவும் சிவனும் சிவபரத்துள் ஆடுமே"[8]**

என மூடர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்.

**மூடத்தனம் பற்றிய கருத்து**

நாள்தோறும் நீரில் குளிப்பதால் இறைவனது அருளைப் பெற்றுவிடலாம் என்று பலரும் நினைக்கின்றனர். இது மூடத்தனமாகும் என்பதனை,

**"காலைமாலை நீரிலே முழுகும்அந்த மூடர்காள்**
**காலைமாலை நீரிலே கிடந்ததேரை என்பெறும்**
**காலமே எழுத்திருந்து கண்கள் மூன்றில் ஒன்றினால்**
**மூலமே நினைப்பாராகில் முத்தி சித்தி யாகுமே"[9]**

என்று தெளிவுபடுத்துகின்றார். காலையும் மாலையும் தண்ணீரிலே மூழ்கினால் இறைவனருள் கிட்டுமாயின் எப்போதுமே நீரில் கிடக்கின்ற தேரையும் இறைவனுருள் பெற்றுவிடுமல்லவா? என்ற கேள்வியை எழுப்புகிறார்.

இறைவன் அந்த ஊரில் இருக்கின்றான், இந்த ஊரில் இருக்கின்றான் என்று ஊர் ஊராகத் தேடித் தேடி அலையும் மனிதரைப் பார்த்து,

**"இந்த ஊரில் இல்லை என்று எங்கு நாடி ஓடுறீர்**
**அந்த ஊரில் ஈசனும் அமர்ந்துவாழ்வது எங்ஙனே**
**அந்தமான பொந்திலாரில் மேவி நின்ற நாதனை**
**அந்தமான சீயில் அவ்வில் அறிந்து உணர்ந்து கொள்ளுமே"[10]**

என்ற பாடலில் இவ்வூரிலில்லாத இறைவன் அவ்வூரிலிருப்பான என்று என்ன உறுதி? என்று கேட்கின்றார். மேலும்,

**"தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடிஓடும் தீதரே**
**தீர்த்தலிங்க முள்ளில் நின்ற சிவனைத் தெளியுமே**
**தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்து காண வல்லிரேல்**
**தீர்த்தலிங்கம் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே"[11]**

என்று மக்களின் மனதைத் தெளிவிக்கின்றார். தீர்த்தம், லிங்கம், மூர்த்தி என்று ஊர் ஊராகச் சென்று தேடுவோரே! அவை அனைத்தையும் உம்முள்ளேயே கொண்டுள்ள உம் சிவனை உன்னிப்பாகக் கவனிப்பீராக! என்று அறிவுரை புகட்டுகின்றார். காடுமேடு குன்றுபள்ளங்கள் அகற்றியும் நாடுதேசம் விட்டு அலைவர் நாதன்பாதங் காண்பரோ? இல்லை. இறைவனை மனத்துள் அல்லால் எங்குத் தேடியும் பயனில்லை என்பது சிவவாக்கியச் சித்தரின் உயரிய சிந்தனையாகும்.

**சிவவாக்கியரின் சமுதாய உயரிய சிந்தனைகள்**

சிவவாக்கியரின் பாடல்களில் புதுமையான கருத்துகள், புரட்சிகரமான சிந்தனைகள்,

எளிய அடிகள், பாமர மக்கள் பயன்படுத்தும் வழக்குச் சொற்கள் என்பன போன்ற செயதிகள் அடங்கியுள்ளன.

கடவுள் என்பவர் பற்றற்றவர், பரவி நிற்பவர், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர். இத்தகைய இறைவனைக் கல்லில் வடித்து, அதற்குப் பூசை செய்து, அதன் மூலம் அவனுடைய கருணையைப் பெற முடியும் என்று நம்பும் மனிதர்களை சிவவாக்கியர் கடுமையாகச் சாடுகிறார்.

**"பண்ணி வைத்த கல்லையும் பழம் பொருள் அதென்று நீர்**

**எண்ண முற்றும் என்னபேர் உரைக்கிறீர்கள் ஏழைகாள்**

**பண்ண வும்ப டைக்கவும் படைத்து வைத்து அளிக்கவும்**

**ஒண்ணு மாகி உலகளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே"**[12]

என்று உள்ளத்தில் உணர வேண்டிய இறைவனைக் கல்லுக்குள் வடித்து அதனைக் கடவுளாக வணங்கும் முறையைச் சாடுகிறார். எனவே, இவர் உருவ வழிபாட்டு முறையை முற்றிலுமாக எதிர்க்கிறார்.

இந்து மதத்தின் ஆணிவேரே மறுபிறவி உண்டு என்ற நம்பிக்கை ஆகும். அத்தத்துவத்தின் உதவியினால் தான் இந்து மதம் நிலைத்து நிற்கின்றது எனலாம். ஒவ்வொரு மானிட உயிரும் மரணத்திற்குப் பிறகும் வாழ்கின்றது.

மனிதர்கள் தாம் வாழும் காலத்தில் செய்த நல்ல வினை, தீய வினைகளுக்கு ஏற்ப அவர்களுடைய ஆத்மா (உயிர்) மீண்டும் மண்ணில் பிறக்கின்றது. நற்செயல் செய்தால் நல்வாழ்க்கையும், தீவினை செய்தால் வறுமை, துயரம், கவலை போன்றவற்றால் வாழ்க்கை அமைவதாக இந்து மதம் உணர்த்துகின்றது.

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**

**பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்புமாகிக்**
**கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்**

**வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா நின்ற இத்தாவர - சங்கமத்துள்**

**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**

**மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"**[13]

என்று மாணிக்கவாசகர் ஒவ்வொரு மானிட உயிரும் இத்தகைய பிறவிகளை அடைகிறது என்று உரைக்கின்றார். மேலும், இந்த நிலை அடையாமல் இருக்க வேண்டுமாயின் இறைவனைத் தொழுது பணிதல் ஒன்றே வழியாகும் என்று உணர்த்தப்படுகின்றது.

உயர்வு தாழ்வு என்ற இந்த சமுதாய அமைப்பு உலகின் வேறு எந்த நாட்டிலும் கிடையாது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

சிவ வாக்கியர் மறுபிறவி என்ற கொள்கையை மறுகின்றார். அவர், உயிரும், உடம்பும்

ஒன்றையொன்று பிரியாமல் நிற்கும். ஒன்று அழிந்தால் இன்னொன்று அழிந்துவிடும் என்ற கருத்துடையவராகவே இருந்துள்ளார்.

ஒருமுறை இறந்து போன உயிர் மீண்டும் உடலில் புகுவதில்லை என்று சிவவாக்கியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

இயற்கையின் படைப்பில் மனிதர் அனைவரும் சமமானவர்களே என்ற சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றிருந்த சித்தர்கள் சாதியக் கோட்பாட்டினை ஏற்க மறுத்தனர்.

இக்கருத்தினை ஏற்பதில் சிவவாக்கியர், முதன்மையானவராகக் காணப்பட்டார். மேலும், இத்தகைய சாதிப் பாகுபாடு ஒழிய வேண்டுமாயின் அதற்குக் கலப்புத் திருமணங்கள் அவசியம் என்பது இன்றையச் சீர்திருத்த சிந்தனையாளர்களின் கருத்து. இக்கருத்தினைத் தன் காலத்திலேயே சிவவாக்கியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

சிவவாக்கியர் பாடல்கள், சமுதாயச் சிந்தனைகளையும், பழமையையும், மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் நிலைகளையும், மக்கள் அறிவு மேன்மை அடைந்திட வேண்டும் என்ற விழைவும், பகுத்தறிவுக் கருத்துக்களும் கொண்டதாகவே காணப்படுகின்றன.

**முடிவுரை**

மனிதன் உலக வாழ்க்கையில் சேர்த்து வைக்கும் செல்வம், புகழ், ஆடம்பர வாழ்வு, மனித உடல் என்ற அனைத்தும் நிலையில்லாதது என உணர்த்த திருமூலர் பல பாடல்களைப் பாடியுள்ளார். சிவவாக்கியர் உருவ வழிபாட்டை வன்மையாக எதிர்த்துப் பாடல்கள் பாடியுள்ளார். சித்தர்களின் சமநோக்குப் பார்வை, சினத்தால் உண்டாகும் தீய விளைவுகள் பற்றியும் அறிய முடிகின்றது. இறைவனைப் பல்வேறு உருவங்களில், பல்வேறு வடிவங்களில் வழிபட்டாலும் பரம்பொருள் என்பது ஒன்றேயாகும் என்பதைத் திருமூலர் தம் பாடலில் விளக்கியுள்ளார் என்பதை இவ் ஆய்வுக் கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. இளங்கோ.நா., சிவவாக்கியர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள், பா. 36.
2. மேலது., பா. 434.
3. மேலது., பா. 131.
4. மேலது., பா. 237.
5. மேலது., பா. 534.
6. மேலது., பா. 546.
7. மேலது., பா. 35.
8. மேலது., பா. 233.
9. மேலது., பா. 132.

10. மேலது., பா. 436.
11. மேலது., பா. 499.
12. மேலது., பா. 236.
13. சிவசங்கரன். வ., (உ.ஆ), திருவாசகம் (சிவபுராணம்): 26 - 32

**துணைநின்ற நூல்கள்**


1. இ. கோமதிநாயகம், சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி, சாந்தா பதிப்பகம், சென்னை, 2008.
2. பி.எஸ். ஆச்சாரியா, அகத்தியர் முதல் வாரியர் வரை சித்தர்கள் அறுபதுபேர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை, 2011.
3. ஏடிஎம். பன்னீர்செல்வம், திருவண்ணாமலைச் சித்தர் இடைக்காடர், சூர்யா பதிப்பகம், திருவண்ணாமலை, 2012.
4. இந்திரா சௌந்தர்ராஜன், சித்தர்கள் ராஜ்ஜியம், சிவா கிராபிக்ஸ், சென்னை, 2012.
5. அ. மாணிக்கம் (உ.ஆ.) திருமந்திரம் மூலமும் உரையும் மூன்றாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2002.
6. வ. சிவசங்கரன் (உ.ஆ.), திருவாசகம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.
7. க.ப.அறவாணன், திருக்குறள் தெளிவுரை, தமிழ்க்கோட்டம், சென்னை, 2007.
8. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், புத்தகம்-1, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி(லிட்), சென்னை, 2016.